DINAMANI-12-DEC-2010

# 6 ஆண்டுகளில் 11.6 கோடி மரக்கன்றுகள் நடத் திட்டம்



## மரக்கன்றுகள் நடத் திட்டம்

ஈரோடு, டிச. 11: 6 ஆண்டுகளில் 11.6 கோடி மரக்கன்றுகளை நடத் திட்டமிட்டுள்ளதாக ஈஷா யோகா மைய குரு ஜக்கி வாசுதேவ் தெரிவித்தார்.

ஈரோட்டில் சனிக்கிழமை அவர் கூறியது: வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று தெரியாமல் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றி, எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். பிரச்னைகள் அனைத்துக்கும் கல்வியறிவு மட்டுமே தீர்வைத் தருகிறது. ஈஷா யோகா அறக்கட்டளை மூலம் தமிழகத்தில் நடத்தப்படும் 8 பள்ளிகளில், 3 ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

லஞ்சம், ஊழல் போன்றவற்றைக் கேட்கும்போது, மனம் வேதனை அடைகிறது. தேர்தல் நேரத்தில் நல்ல தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அரசியல், ஆன்மிகம் இரண்டிலும் உள்ளவர்கள் குறித்து வரும் செய்திகள், நாட்டில் நல்லவர்கள் இல்லை என்பது போல் சித்தரிக்கிறது. எனவே, நல்லவர்கள் குறித்தும் ஊடகங்கள் செய்தி வெளியிட வேண்டும். தமிழகத்தில் வரும் 6 ஆண்டுகளில் 11.6 கோடி மரக்கன்றுகளை நடத் திட்டமிட்டுள்ளோம். இதுவரை, 1.6 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் மூலம் பசுமையின் அளவு 5.2 சத அளவு அதிகரித்துள்ளதாக அரசு ஆய்வு தெரிவித்துள்ளது என்றார்.